www.tamilarangam.net



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

புதுடில்லியில் வைத்து ராஜீவ் காந்தியை தீர்த்துக் கட்டினால் புலிகள்மீது சந்தேகம் ஏற்பட்டிருக்காது.

சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் இந்திரா காந்தியின் குடும்பத்தில் உள்ள அனைவரது பெயரும் இருந்தது.

இந்திரா காந்தியை சீக்கிய இராணுவ சிப்பாய் சுட்டுக்கொன்றான். அதற்கடுத்து ராஜீவ் காந்தியையும் சீக்கியர்கள் குறிவைத்திருந்தனர்.

அதன் காரணமாகவே ராஜீவுக்கு பலத்த பாதுகாப்பும், துப்பாக்கிக் குண்டு துளைக்காத ஆடையும் வழங்கப்பட்டிருந்தது. கறுப்புப் பூனைகள் என்று அழைக்கப்படும் சிறப்பு பாதுகாப்பு பிரிவினரே ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள்.

புதுடில்லி சென்ற சிவராசன் அங்கு ராஜீவ்காந்தியை குறிவைத்துத் தாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அரிதாக இருந்ததால், அத் திட்டத்தை கைவிடும் முடிவுக்கு வந்தார்.

சென்னை திரும்பிய சிவராசன் 1991 மார்ச் மாதம் 21ம் திகதி அங்கிருந்தபடியே இரகசிய வானொலி மூலம் பொட்டம்மானுடன் தொடர்பு கொண்டார்.

'புதுடில்லியில் வைத்து திட்டத்தை செயற்படுத்த கால அவகாசமும், பெரு முயற்சியும் தேவை. சென்னைக்கும் வருகிறார்' என்று சிவராசன் பொட்டம்மானிடம் கூறியிருக்கிறார்.



பாதுகாப்புக்குள்

### சென்னையில் ராஜீவ்

மார்ச் மாதம் தேர்தல் பிரசாரத்திற்காக ராஜீவ் காந்தி சென்னை வருகிறார் என்று தமிழ்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

அதனைப் பார்த்துவிட்டே சென்னைக்கு ராஜீவ் வரும் தகவலை பொட்டம்மானிடம் சிவராசன் கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் தாக்குதல் நடத்துவதானால், பத்திரிகையாளர்கள் போன்றே அங்கு சென்று தங்கியிருக்க வேண்டும்.

அதனால் பிரபலமான சில ஆங்கிலப் பத்திரிகை நிருபர்கள் போன்று போலியான அடையாள அட்டைகள் சிவராசனால் தயார் செய்யப்பட்டன.

ராஜீவ்காந்தி பிரதமராகிவிட்டால் அவரை நெருங்குவதே கஷ்டமாக இருக்கும். அதனால் அதற்கு முன்னர் எப்படியாவது தீர்த்துக் கட்ட வேண்டும்.

ஆகவே புது டில்லியில் வைத்து குறி பார்த்துக் கொண்டிருந்தால் காலம் கடந்துவிடும்.

புதுடில்லி பரிச்சயமான இடமல்ல. அதனால் திட்டத்தை நிறைவேற்ற கடும் முயற்சி தேவைப்படும். இடையே மாட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

மேற்கண்ட எல்லாவற்றையும் நன்கு யோசித்தே, புதுடில்லியைவிட சென்னையே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார் சிவராசன்.

# யாழில் இருந்து புறப்பட்ட தாக்குதல் அணி



யாழில் இந்தியப் படை

திட்டங்கள் தீட்டி அதற்கான ஏற்பாடுகள் செய்வதில் சிவராசன் அனுபவம் உள்ளவர்.

அதனால் சிவராசனின் யோசனைப் படியே சென்னையில் வைத்து ராஜீவை தீர்த்துக்கட்ட முடிவு செய்யப்பட்டது.

### இரகசிய ஏற்பாடு

ராஜீவ்காந்தியை தீர்த்துக் கட்டப் போகும் திட்டம் பற்றி தமிழகத்தில் இருந்த மிக முக்கியமான ஆதரவாளர்களுக்கு மட்டுமே கூறப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியப் படை செய்த கொடுமைக்கு மூல காரணமாக இருந்தவர் ராஜீவ் காந்தி. எனவே அவரை தீர்த்துக் கட்ட வேண்டும் என்பது அவர்களது கருத்தாக இருந்தது.

தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர் பாவலேறு பெருஞ்சித்திரனார். இந்தியப்படை அட்டூழியத்தையும், ராஜீவையும் கண்டித்து, சாபமிடுவதுபோல கவிதை எழுதினார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட வேண்டியவரே என்றும், தமிழர்களது எதிரி என்றும் அந்தக் கவிதையில் மிகக் கடும் வார்த்தைப் பிரயோகங்கள் அடங்கியிருந்தன.

பெருஞ் சித்திரனார் முதலில் புளொட் அமைப்பின் ஆதரவாளராக இருந்தவர். பின்னர் புலிகளை ஆதரித்தார்.

உலகத் தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தவர் அமரர் பெருஞ் சித்திரனார்.

அவரது மகன் பேரறிவாளனும் தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்னும் எண்ணத்தோடு செயற்பட்டவர். புலிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்.

இன்னொருவர் இரும்பொறை. இவரும் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்தவர். தமிழ் நாட்டில் இருந்து இந்தி ஆட்சியாளரை விரட்ட வேண்டும் என்ற கொள்கையுடையவர்.



நளினி

இவரும் புலிகளுடன் நெருக்கமாகி நம்பிக்கைக்குரிய ஒருவராக இருந்தார். இவ்வாறான ஒரு சிலர் தவிர, தமிழ் நாட்டிலிருந்த ஏனைய தமது ஆதரவாளர்களுக்கு இரகசியத்தை வெளியிடவில்லை.

தமிழ் நாட்டிலிருந்த புலிகளுக்கும்கூட ராஜீவ் காந்தியைத் தீர்த்துக் கட்ட ஏற்பாடுகள் நடப்பது தெரிந்திருக்கவில்லை.

குறிப்பிட்ட நடவடிக்கையை செயற்படுத்த யார் யாருக்கு தகவல் தெரிய வேண்டுமோ அவர்களுக்கு மட்டுமே தகவல்கள் தெரியப்படுத்தப்படும்.

இரகசிய வேலைத் திட்டங்களை அதற்குரிய கண்டிப்பான விதிகளுடன் புலிகள் செயற்படுத்துவதால், அவை முன்கூட்டியே கசிவதும் மிக அரிது.

தமிழ் நாட்டில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் சிலருடன் தமது தமிழக ஆதரவாளர்கள் மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார் சிவராசன்.

முத்துராஜாவுக்கு சங்கரி என்றொரு அக்கா இருந்தார். அவரது சென்னை வீட்டில் தான் புலிகள் இயக்க பிரமுகரான பேபி சுப்பிரமணியம் தனது உடமைகளை வைத்து விட்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

ராஜீவ் கொலைக்கு முன்பாகவே சென்னையில் இருந்து புறப்பட்டுவிட்டார் பேபி சுப்பிரமணியம். அவருக்கும் ராஜீவ் கொலைத் திட்டம் தெரிந்திருக்கவில்லை. பிரபாகரனின் அழைப்பின் பேரிலேயே சென்னையை விட்டு புறப்பட்டார் பேபி.

பேபி சுப்பிரமணியம் புறப்படும்போது லதா கண்ணன் என்பவர் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான பெண்மணி.

அவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். ராஜீவ் காந்தி வரும்போது தாம் மாலையணிவிக்க விரும்புவதாகவும், கடந்த காலத்தில் நடந்ததை மறந்து ராஜீவுடன் நட்பை ஏற்படுத்த விரும்புவதாகவும் லதா கண்ணனுக்கு சிவராசன் கூறியிருக்கிறார்.

லதா கண்ணனுக்கு சந்தேகம் வரவில்லை. அவரும் மகிழ்ச்சியுடன் உதவ முன்வந்தார். லதா கண்ணனுக்கு கோகிலா என்றொரு மகளும் இருந்தார்.

### பத்திரிகையாளர்களாக

கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் போன்றே செல்வது என்பதுதான் திட்டம். தம்மோடு புகைப்படப்பிடிப்பாளர் ஒருவரையும் அழைத்துச் செல்ல சிவராசன் முடிவு செய்தார்.

சென்னையில் சுபா ஸ்ரூடியோ என்னும் நிறுவனத்தை நடத்தியவர் சுபா சுந்தரம்.

சுபா சுந்தரத்துக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருந்தது.

மதுரையில் உணவு விடுதி ஒன்றில் பணிபுரிந்தவர் முத்துராஜா. இவர் திராவிடர் கழக ஆதரவாளர். அந்த உணவு விடுதிக்கு சென்று புலிகள் சாப்பிடுவது வழக்கம்.

அப்போது ஏற்பட்ட பழக்கத்தால் முத்து ராஜாவுக்கு நல்ல வேலை ஒன்றை பெற்றுக் கொடுக்க விரும்பிய புலிகள், சென்னையில் உள்ள சுபா சுந்தரத்திடம் அவரை வேலைக்கு சேர்த்தனர்.

சுபா சுந்தரத்தின் மனைவி சென்னையிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது தாதியான பத்மா என்பவர் அவரை நன்கு கவனித்தார். அதனால் பழக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக பத்மாவின் மகனான பாக்கிய நாதனுக்கும் சுபா சுந்தரத்தின் ஸ்ரூடியோவில் வேலை கிடைத்தது.

அந்த பாக்கியநாதன் ஹரி பாபு என்பவரையும் தன்னுடன் வேலைக்குச் சேர்த்தார்.


பாக்கியநாதன், ஹரிபாபு ஆகியோருக்கு முத்துராஜா ஊடாகவும், சுபா சுந்தரம் மூலமாகவும் புலிகளுடன் அறிமுகம் ஏற்பட்டது.

சென்னையில் இருந்த தமது அச்சகத்தை பாக்கிய நாதனிடம் ஒப்படைத்திருந்தார்.

அதனால் பாக்கிய நாதன் சுபா ஸ்ரூடியோவுக்கு வேலைக்கு செல்வதை நிறுத்திக் கொண்டார்.

பாக்கியநாதன் வீட்டுக்கு சிவராசனும் சென்று வந்தபோது, அவரது தங்கையான நளினி அறிமுகமானார்.

### ஒத்திகை




சென்னைக்கு மார்ச் மாதம் ராஜீவ் காந்தி வரவில்லை. அவரது பயணத் திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது.

மார்ச் மாதம் ராஜீவ் காந்தி வந்திருந்தால் கூட அவரை தீர்த்துக்கட்ட புலிகள் தயாராக இருக்கவில்லை.

ராஜீவ் கலந்து கொள்ளும் கூட்டத்தில் அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவதானித்து ஒரு ஒத்திகை நடத்துவது பின்னர் மறு முறை வரும்போது திட்டத்தை நிறைவேற்றுவது என்பதே சிவராசனின் எண்ணமாக இருந்தது.

காங்கிரசுக்கு தமிழ்நாடு முக்கியமான மாநிலம். ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்து அங்கு போட்டியிட்டது.



பேரறிவாளன்

தேர்தல் பிரசாரத்திற்காக குறைந்தது இரண்டு தடவையாவது ராஜீவ் வருவார் என்று புலிகள் எதிர்பார்த்தனர்.

அதனால் மார்ச்சில் ஒத்திகை, அடுத்த கூட்டத்தில் குறி என்று தீர்மானிக்கப்பட்டது.

ராஜீவின் பயணத் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதால், ஒத்திகைக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது.

இன்னொரு முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தமிழகத்திற்கு வரப்போவதாக செய்தி வெளியானது. தி.மு.க. அணிக்காக பிரசாரம் செய்வதற்காகவே வி.பி.சிங் சென்னை வரவிருந்தார்.

வி.பி. சிங்கின் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தால், ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை சமாளிப்பது பற்றிய அறிவு பெறலாம். முன்னாள் பிரதமர்களுக்கு ஒரே விதமான பாதுகாப்புத்தானே தரப்படும். அதனால் வி.பி. சிங் கலந்து கொள்ளும் கூட்டத்தில் ஒத்திகை பார்க்க சிவராசன் தீர்மானித்தார்.

அதற்கு முன்பாக தமது திட்டம் பற்றி பொட்டம்மானுடன் நேரடியாக விவாதித்து ஒப்புதல் பெறவேண்டியிருந்தது.

அதற்காக யாழ்ப்பாணத்திற்கு படகு மூலம் சென்றார் சிவராசன். இறுதி ஒப்புதல் பெற்ற பின்னர் தாக்குதல் அணியுடன் புறப்பட்டார் சிவராசன்.

மே முதலாம் திகதியன்று சிவராசன், தாணு, சுபா உட்பட ஆறுபேருடன் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டது தாக்குதல் அணி.

தாக்குதல் அணியையும் கரும்புலித் தாக்குதலுக்கு தெரிவான தாணு, சுபா ஆகியோரையும் கையசைத்து வழியனுப்பி வைத்தார் பொட்டம்மான்.

தமிழகம் சென்றபோது கரையில் அவர்களை சாந்தன் வரவேற்றார். சாந்தன் தான் அப்போது புலிகளது தமிழகப் பொறுப்பாளராக இருந்தார்.

சென்னையில் விஜயன் என்பவர் வாடகைக்கு பிடித்துக்கொடுத்த வீட்டில் தாக்குதல் அணி தங்கியிருந்தது.

மே மாதம் ஏழாம் திகதி சென்னை தேனாம்பேட்டையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார்.

அக் கூட்டத்திற்கு தாணுவையும், சுபாவையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

அங்குதான் ஒத்திகை பார்க்க வேண்டும்.

அனைவருமே இலங்கைத் தமிழர்களாக இருந்தால் சந்தேகம் வரும். அதனால் நளினியையும் தம்மோடு அழைத்துச் சென்றார் சிவராசன்.

தேனாம் பேட்டைக் கூட்டத்தில் கொலை ஒன்றுக்கான ஒத்திகை நடந்து கொண்டிருக்க, அதனை பற்றியே அறியாத வி.பி. சிங் உற்சாகமாக உரையாற்றிவிட்டுப் போனார்.

எனினும் நளினிக்குக்கூட அங்கு சென்றது கொலைக்கான ஒத்திகைக்கு என்பது தெரிந்திருக்கவில்லை.

தமிழகம் வரும் தலைவர்களுக்கு வரவேற்பு கொடுக்கிறோம். ஆட்சிக்கு வரும் கட்சியுடன் நட்பு ஏற்படுத்த இப்படி செய்ய வேண்டியிருக்கிறது என்றே நளினிக்கு கூறப்பட்டது.

மே மாத மத்தியில் ராஜீவ் காந்தி சென்னைக்கு வருவார் என்று லதா கண்ணன் மூலம் சிவராசன் அறிந்து கொண்டார்.

கூட்டம் எங்கெங்கு நடக்கிறது என்பதை அறிவதற்கு காங்கிரஸ் தொடர்புள்ள தமது ஆதர வாளர்களை சிவராசன் பயன் படுத்தினார்.

### தளர்வு

ராஜீவ் காந்தியின் பாதுகாப்பை அதிகப் படுத்துமாறும், அவருக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாகவும் இந்திய புலனாய்வு பிரிவு (ஐ.பி) இந்திய அரசுக்கு அறிவித்தது.

ராஜீவ் காந்தியின் பாதுகாப்பை வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது குறைத்திருந்தார்.

முன்னாள் பிரதமருக்கு அதிக பாதுகாப்பு தேவையில்லை. தேவையற்ற செலவுகளை குறைக்கவே அந்த நடவடிக்கை என்று வி.பி.சிங் அரசு கூறியிருந்தது.

குறைக்கப்பட்ட பாதுகாப்பை மீண்டும் வழங்குமாறு ஐ.பி.சிபாரிசு செய்தது.

அதனை ராஜீவ் உட்பட யாருமே பெரிதுபடுத்தவில்லை.

அதுதவிர பாதுகாப்பு வியூகங்களை மீறி மக்களை நெருங்கி சந்திக்கத் தொடங்கினார் ராஜீவ்.

"தமிழகத்திற்கு ராஜீவ் எப்போது வருகிறார்?" கூட்ட ஒழுங்குகளை செய்வதற்காக தலைமைப் பீடத்திடம் தமிழக காங்கிரஸ் கேட்டது.

காங்கிரசுக்குள் பலத்த கோஷ்டி மோதல்.

ராஜீவை தமிழகம் அழைத்து வருவது யார்? என்றும் அந்தக் கோஷ்டிகள் இடையே போட்டி.

இறுதியாக தமிழக காங்கிரசுக்கு ஃபக்ஸ் செய்தி வந்தது.

'மே 21ம் திகதி ராஜீவ் காந்தி சென்னை வருகிறார்!'

இத் தகவல் சிவராசனின் காதுக்கும் எட்டியது.

தாக்குதல் அணி தயாரானது. தற்கொலை அங்கியும் தயாரானது.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்